# فضل أيام عشر ذي الحجة والأعمال الواردة فيها باللغة التاميلية

## துல் ஹஜ் மாதத்தின் முந்திய பத்துத் தினங்களின் சிறப்புக்களும், அதில் புரியவேண்டிய நல்லறன்களும்

புகழனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே! ஸலவாத்தும், ஸலாமும் அல்லாஹ்வின் அடியாரும், தூதருமான முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அன்னவர்களின் குடும்பத்தவர், தோழர்கள் அனைவர் மீதும் நின்று நிலவட்டுமாக.

### துல் ஹஜ் மாதத்தின் முந்திய பத்துத் தினங்களின் சிறப்புகள்

மனிதன் நல்லறன்கள் செய்வதற்கு அல்லாஹ் மிகவும் விரும்பும் நாட்கள் துல் ஹஜ் மாத்தின் முந்திய பத்துத் தினங்களாகும் என அல்லாஹ்வின் துதரவர்கள் கூற, அல்லாஹ்வின் பாதையில் மேற் கொள்ளப்படும் புனிதப் போரின் நிலை என்ன? என தோழர்கள் வினவினர். ஆம் அல்லாஹ்வின் பாதையில் மேற்கொள்ளப்படும் புனிதப் போர் இக்குறித்த தினங்களில் மேற்கொள்ளப்படும் அமல்களுக்கு ஈடாகாது. ஆனால் எவரொருவர் தன்னுடலையும், தன் செல்வத்தையும் புனிதப் போருக்காக அர்ப்பணித்து ஷஹீதாக்கப்படுகிறாரோ அவரைத் தவிர என்றார்கள். „ (புஹாரி)
இமாம் அஹ்மத் அவர்களுக்குரிய ஓர் அறிவிப்பில் துல் ஹஜ் மாதத்தின் முந்திய பத்துத்தினங்களும் மனிதன் நற்கருமங்கள் புரிவதற்கு அல்லாஹ்விடத்தில் மிக மதிப்புள்ள, அதிக விருப்பத்திற்குரிய நாட்களாக இருக்கின்றன. ஆகவே அத்தினங்களில் ஏகத்தவக் கலிமாவை அதிகம் கூறுவதிலும், தக்பீர் சொல்வதிலும், இறைவனைப் புகழ்வதிலும் அதிகம் ஈடுபடுங்கள் „என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கும் செய்தியை இப்னு ஹிப்பான் (ரஹ்) அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள் " நாட்களில் மிகச் சிறந்த நாள் அறபாவுடைய நாளாகும்.

### இத் தினங்களில் செய்யவேண்டிய நல்லமல்கள்

1- ஹஜ், உம்ரா ஆகிய வணக்கங்களில் ஈடுபடல். இவைகளே இத்தினங்களில் செய்யவேண்டிய மிகச் சிறந்த அமல்களாகும். இதன் சிறப்புக் குறித்து ஏராளமான ஹதீஸ்கள் காணப்படுகின்றன. "ஒரு உம்றா மறு உம்றாவுக்கிடையில் செய்யப்படும் பாவங்களுக்கான பரிகாரமாகும். அல்லாஹ்வால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்குரிய

கூலி சுவர்க்கைத் தவிர வேறில்லை „எனும் நபி மொழியே மேற் குறித்த அமல்களின் சிறப்புக்குப் போதிய சான்றாகும்.

2- இக்குறித்த தினங்களில் நோன்பு வைத்தல், குறிப்பாக அறபாவுடைய தினத்தில் நோன்பு வைப்பதற்கு அதிக அக்கறை எடுத்தல். நோன்பு சிறந்த அமல்களின் வரிசையில் உள்ளது என்பதையும், அதனாலேதான் அல்லாஹ் அதை தனக்கென சொந்தமாக்கிக் கொண்டதாகப் பிரகடணப்படுத்தியுள்ளான். என்பதையும் பின்வரும் ஹதீஸ் குத்ஸி வாயிலாக அறிய முடிகிறது. "அல்லாஹ் கூறுகிறான் :நோன்பு எனக்குரியது அதற்கு கூலி கொடுப்பவனும் நானே, அடியான் தனது ஆசையை அடக்கிக் கொண்டதும், உணவை, குடிபானத்தை தவிர்த்துக் கொண்டதும் எனக்காகவே. இமாம்களான புஹாரி, முஸ்லிம் ஆகியோரின் ஓர் அறிவிப்பில் "எந்தவொரு அடியான் அல்லாஹ்விடம் நன்மையை எதிர்பார்த்து ஒரு நாள் நோன்பு வைப்பானேயானால் அல்லாஹ் அந்நோன்பின் காரணமாக எழுபது ஆண்டுகள் நடந்து செல்லும் தூரமளவு நரகை விட்டும் அவனைத் தூரமாக்குகின்றான். என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். இமாம் முஸ்லிம் அவர்களின் மற்றோர் அறிவிப்பில் அறபாவுடைய தினத்தில் வைக்கப்படும் நோன்பின் காரணமாக அல்லாஹ் அதற்கு முந்திய ஓர் ஆண்டினதும், அதற்குப் பிந்திய ஓர் ஆண்டினதும் பாவங்களை மன்னிப்பான் என்று நான் எதிர்பார்க்கிறேன் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

3- இந்நாட்களில் தக்பீர் கூறுவதிலும், திக்ர் செய்வதிலும் ஈடுபடல். இது பற்றி அல்லாஹ் அறியப்பட்ட (அந்) நாட்களில் அல்லாஹ்வின் பெயரை நினைவு கூறுவார்கள் „ எனக் கூறுகிறான். அறியப்பட்ட அந்நாட்கள் என்பது துல் ஹஜ் மாதத்தின் முந்திய பத்து நாட்கள் என்பதுதான் தப்ஸீருடைய உலமாக்களின் கருத்தாகும். எனவேதான் இந்நாட்களில் அதிகமதிகம் திக்ர் செய்வதில் ஈடுபடுவதை உலமாக்கள் சிறந்ததோர் வணக்கமாகக் கருதுகிறார்கள். "அத்தினங்களில் ஏகத்துவக் கலிமாவை அதிகம் கூறுவதிலும், தக்பீர் சொல்வதிலும், அல்லாஹ்வைப் புகழ்வதிலும் அதிகம் ஈடுபடுங்கள்„ என இமாம் அஹ்மத் அவர்கள் பதிந்து வைத்திருக்கும் நபி மொழி உலமாக்களின் மேற்படி கூற்றுக்கு மேலும் வலுசேர்க்கிறது. இமாம் புஹாரி அவர்களுக்குரிய மற்றுமொரு அறிவிப்பில் இப்னு உமர் (ரழி) அபூ ஹுரைரா (ரழி) ஆகிய இருவரும் சந்தைக்குச் சென்று தக்பீர் சொல்பவர்களாக இருந்தார் கள். அப்போது அங்குள்ள ஏனையோரும் இவர்களைத் தொடர்ந்து தக்பீர் சொல்லக் கூடியவர்களாக இருந்தார் கள். என காணப்படுகிறது.

மேலும், குறித்த இத்தினங்களில் தாபிஈன்களில் உள்ள மார்க்க சட்ட மேதைகள் பலரும் பின் வருமாறு தக்பீர் சொல்பவர்களாக இருந்தார்கள் என்றொரு செய்தியும் காணப்படுகிறது.

اللهُ أَكْبَرُ، اللهُ أَكْبَرُ، لاَ إِلَهَ إِلاَّ اللهُ واللهُ أَكْبَرُ، اَللهُ أَكْبَرُ وَلِلهِ الْحَمْدُ.

அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர், லா இலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து,,

மேலும் சந்தைத் தொகுதி, வீடுகள், பள்ளிவாயல்கள் போன்ற இடங்களில் தக்பீர் சொல்வது விரும்பத்தக்கதாகும். இது குறித்து அல்லாஹ் "உங்களுக்கு அவன் நேர்வழி காட்டியதற்காக (தக்பீர் கூறி) அவனைப் பெருமைப்படுத்துவதற்காகவும்.. .. ..,, எனக் கூறுகிறான். ஆனால் எல்லோருமாக கூட்டாகச் சேர்ந்து ஒரே தொனியில் தக்பீர் சொல்வது கூடாது. அது குறித்து எந்தவொரு ஆதாரமும் காணப்படவில்லை. ஒருவர் மற்றவரைத் துயராமல் தனித்தனியாக தக்பீர் சொல்வதுதான் நபி வழியாகும். ஏனைய திக்ர்கள், துஆக்களிலும் இம்முறையே கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். தக்பீர் சொல்லிக் கொள்ள தெரியாதவராக இருந்தால் அவர் கற்றுக் கொள்ளும் வரை பிறரைத் துயர்ந்து சொல்லலாம். இது போக மார்கத்தில் அனுமதிக்கப்பட்ட ஏனைய திக்ர்கள், தஸ்பீஹ்கள், துஆக்கள் போன்றவற்றிலும் ஈடுபடலாம்.

4- சகல விதமான பாவங்களை விட்டும் தவ்பாச் செய்து மீளுதல். அப்போதுதான் அல்லாஹ்வின் கருணைக்கும், அருளுக்கும் தகுதியுடையவர்களாக ஆக முடியும். பாவம் மனிதனை அல்லாஹ்விடமிருந்து தூரமாக்குவதோடு அவனது வெறுப்புக்கும் காரணமாகி விடுகிறது. வணக்க வழிபாடுகளோ அல்லாஹ்வின் நெருக்கத்திற்கும், அன்புக்கும் காரணமாக இருக்கின்றது. இமாம்களான புஹாரி, முஸ்லிம் ஆகியோரின் ஓர் அறிவிப்பில் "அல்லாஹ் ரோசமுடையவனாக இருக்கிறான். எப்போது ஓர் அடியான் அல்லாஹ் தடை செய்துள்ள ஒரு காரியத்தை செய்கிறானோ அப்போது அல்லாஹ் ரோசமடைகிறான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

5- இந்நாட்களில் உபரியான (நபிலான) தொழுகைகள், தர்மம் செய்தல், குர்ஆன் ஓதுதல், நன்மையை ஏவி தீமையைத் தடுத்தல் போன்ற நல்லறன்களில் அதிகம் ஈடுபடல். குறித்த இத்தினங்களில்

மேற்கொள்ளப்படும் நற்கிரிகைகளுக்கு அல்லாஹ் பெருமதி மிக்க கூலிகளை வழங்குகிறான். இக்காலங்களில் மேற்கொள்ளப்படும் சாதாரண நற்கிரிகைகள் கூட ஏனைய காலங்களில் மேற்கொள்ளப்படும் ஜிஹாத் போன்ற அசாதாரண அமல்களை விட அல்லாஹ்வின் அதிக விருப்பத்திற்கும், அதிக வேண்டுதலுக்குமுரிய அமலாக மாறிவிடுகிறது.

6- இக்குறித்த நாட்களில் இரவு பகல் எல்லா நேரங்களிலும் தக்பீர் சொல்லுதல். இது பெருநாள் தொழுகை வரை நீடிக்கும். இதற்கு தக்பீர் முத்லக் எனப்படும். மேலும் ஐங்காலத் தொழுகைகளையும் ஜமாஅத்தாக நிறைவேற்றிய பிறகு தக்பீர் கூறல். இது ‘தக்பீர் முகய்யத்‘ என அழைக்கப்படும். ஹாஜிகள் தவிர்ந்த ஏனையோர் அறபாவுடைய தினமான 9வது தினத்தின் பஜ்ர் தொழுகையிலிருந்தும், ஹாஜிகள் பெருநாள் (10ம் ) தினத்தின் ளுஹர் தொழுகையிலிருந்தும் இத் தக்பீரைக் கூறிவருவார்கள் அய்யாமுத் தஷ்ரீக் எனும் நாட்களின் இறுதி நாளான அதாவது துல் ஹஜ் மாதத்தின் 13ம் தினத்தின் அஸர் தொழுகை வரை இத் தக்பீர் நீடிக்கும்.

7- துல் ஹஜ் மாதத்தின் பத்தாம் (பெருநாள் ) தினத்திலும், அதை அடுத்து வரக்கூடிய அய்யாமுத் தஷ்ரீக் எனும் மூன்று நாட்களிலும் ஏதாவது ஒரு நாளில் உழ்ஹிய்யா (பிராணி அறுத்து தான் உண்பதோடு பிறருக்கும் தர்மமாக) கொடுத்தல். இது நமது தந்தை நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் வழி வந்த நடை முறையாகும். இமாம்களான புஹாரி, முஸ்லிம் ஆகியோரின் ஓர் அறிவிப்பில் நபி (ஸல்) அவர்கள் "கொம்புகள் உள்ள மற நிறமுடைய இரு ஆடுகளை தனது காலால் அழுத்திப் பிடித்தவர்களாக அல்லாஹ்வின் பெயர் சொல்லி, தக்பீர் கூறி தனது கரங்களாலேயே அறுத்தார்கள்.„ என காணப்படுகிறது.

8- உங்களிலொருவர் உழ்ஹிய்யாக் கொடுக்கும் நாட்டமுடையவராய் இருந்து துல் ஹஜ் மாதத்தின் பிறையைக் கண்டால் அவர் தனது முடியையோ, நகங்களையோ களைவதை தவிர்ந்து கொள்ளவும்.„ என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். மற்றோர் அறிவிப்பில் "அவர் உழ்ஹிய்யா கொடுக்கும் வரை தனது முடியையோ, நகங்களையோ களைய வேண்டாம்.„ என காணப்படுகிறது. மேற்படி வழி முறை ஹஜ்ஜில் ஹதியு (பிராணி அறுத்து தர்மம்) கொடுப்பதற்கு ஒப்பாக இருக்கின்றது. அல்லாஹ் கூறுகிறான் 'அந்த ஹத்யு இடத்தை அடைவதற்கு (நீங்கள் ஹதியு கொடுக்கும்) முன் உங்கள் தலை முடிகளைக் களையாதீர்கள்„ இது உழ்ஹிய்யா கொடுப்பவருக்கு மாத்திரம் உரிய சட்டமாகும். அவருடைய மனைவி மக்கள் யாரையும்

இது சாராது. ஒருவர் தனது தலையை தேய்த்துக் கழுவுவதன் மூலமாக தலை முடி உதிர்ந்தால் அது குற்றமன்று.

9- பெருநாள் தொழுகையை நிறை வேற்றுவதற்கும், அதை அடுத்து இடம் பெறும் குத்பாவில் கலந்து பயன் பெறுவதற்கும் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும்.

இஸ்லாம் நமக்கு பெருநாளை வழங்கி இருப்பதன் எதார்த்த நிலையை அறிந்து கொள்ளவேண்டும், அது இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்கும், நல்லறன்கள் புரிவதற்கும் உகந்த நாளாகும். மாறாக அதை ஒரு ஆபாச குண நாளாகவோ, ஆடல், பாடல், வீண் வேடிக்கைகள், போதை வஸ்துப் பாவனை போன்ற பாவங்களுக்கோர் உகந்த நாளாகவோ ஆக்கி விடக் கூடாது. முந்திய பத்துத் தினங்களில் செய்த நல்லறன்கள் கூட இத்தகைய பாவகாரியங்களால் பாழாய்ப் போய்விடும்.

10-அல்லாஹுக்கு வழிப்படல், அவனை நினைவு கூறல், ஷுக்ர் எனும் தனது நன்றியறிதலை வெளிப் படுத்தல், கடமையான சகல வணக்க வழிபாடுகளையும் எடுத்து நடத்தல், விலக்கப்பட்டவைகளைத் தவிர்ந்து கொள்ளல் போன்றவைகளில் இந் நாட்களை ஈடு படுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அல்லாஹ்வின் அன்பையும், அருளையும், திருப் பொருத்தத்தையும் எம்மால் பெறமுடியும். அவனே நேரிய, சீரிய வழியில் செலுத்துபவனாக இருக்கின்றான். நபி (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தவர்கள், தோழர்கள் அனைவர் மீதும் அல்லாஹ் ஸலவாத்தும், ஸலாமும் சொல்வானாக.

மூலம்: அறிஞர் அப்துல்லாஹ் பின் அப்துர் ரஹ்மான் அல் ஜப்ரீன்
தமிழில்: மவ்லவி முஹம்மத் இம்ரான் (கபூரி)
(அபூ அப்துல் பாBசித்)